

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (29.5.2025) தலைமைச் செயலகத்தில், மனிதவள மேலாண்மைத் துறை சார்பில் நிர்வாக சீர்திருத்த முன்னெடுப்பின் மூலமாக "எளிமை ஆளுமை" திட்டத்தை தொடங்கி வைத்து, பயனாளிகளுக்கு முதியோர் இல்லங்களுக்கான உரிமச் சான்றிதழ், பணிபுரியும் மகளிருக்கான தங்கும் விடுதிகள் உரிமச் சான்றிதழ், மகளிர் இல்லங்களுக்கான உரிமச் சான்றிதழ், வெள்ளை வகை தொழிற்சாலைகள் பட்டியல் விரிவாக்க சான்றிதழ் ஆகியவற்றை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, திருமதி. என். கயல்விழி செல்வராஜ், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி சுப்ரியா சாகு, முதன்மைச் செயலாளர் கோ. பிரகாஷ், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை செயலாளர் திருமதி. ஜெயஸ்ரீ முரளீதரன், PWC. டேவிதார், (ஓய்வு), தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் தலைவர் முனைவர் ஜெயந்தி முரளி, ஆகியோர் கலந்து கொண்டனர்.

### மூத்த பத்திரிகையாளர்

# ஏ.பி.மோகன் மறைவிற்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, மே 31 -

மூத்த பத்திரிகையாளர் ஏ.பி.மோகன் மறைவிற்கு இரங்கல் தெரிவித்துள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மறைந்த மோகன் குடும்பத்திற்கு ரூபாய் 10 லட்சம் நிதியுதவி வழங்கி உத்தரவிட்டுள்ளார்.

இது குறித்து அவரது அறிவிப்பு வருமாறு:-

“மக்கள் குரல்” நாளிதழின் மூத்த செய்தியாளரும், சென்னை பத்திரிகையாளர் மன்ற உறுப்பினருமான ஏ.பி.மோகன் (வயது 66) அவர்கள் தனியார் மருத்துவமனைக்கு பரிசோதனைக்காக சென்றபோது எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட மாரடைப்பின் காரணமாக நேற்று (29.05.2025) சென்னையில் இயற்கை எய்தினார் என்ற செய்தி அறிந்து மிகவும் வருந்துகிறேன்.

ஏ.பி.மோகன் அவர்கள், “மக்கள் குரல்” பத்திரிகையில் செய்தியாளராக 40 ஆண்டுகளுக்கும் மேலாக பணியாற்றியவர். அனைவரிடமும் நல்ல பண்புடனும், அன்புடனும் பழகும் இனிய பண்பாளர். இவரது பத்திரிகைத் துறையின் பணி அனைவராலும் பாராட்டுக்குரியது என்பதை நினைவு கூர்கிறேன்.

ஏ.பி.மோகன் அவர்களின் மறைவு பத்திரிகை உலகிற்கு மிகப்பெரிய இழப்பாகும். அன்னாரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினர், உறவினர்கள், பத்திரிகை உலக நண்பர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைந்த மூத்த பத்திரிகையாளர் ஏ.பி.மோகன் அவர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து பத்து இலட்சம் ரூபாய் வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா!

# வேலூர் மாநகரம் முழுவதும் நலஉதவிகள் வழங்கல்!

## ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்ற மாநகரக் கழக கூட்டத்தில் தீர்மானம்

வேலூர், மே 31-

வேலூர் மாநகர திமுக அவசர செயற்குழு கூட்டம் மாநகர அலுவலகத்தில் மாநகர செயலாளர் ப. கார்த்திகேயன் எம்.எல்.ஏ. தலைமையில் நடந்தது.

நிகழ்ச்சியில் மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமது சகி ஆலோசனை வழங்கினார்.

இக்கூட்டத்தில் முத்தமிழ் அறிஞர் தமிழின தலைவர் கலைஞர், அவர்களின் 102 வது பிறந்தநாள் விழா வருகிற ஜூன் 3ஆம் தேதி என்பதால் நாம் அனைவரும் அந்நாளில் காலை 9 மணி அளவில் வேலூர் மாநகர திமுக அலுவலகத்தில் அமைக்கப் பட்டுள்ள பேரறிஞர் அண்ணா முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர்களின் சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செய்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி ,சிறப்பாக கொண்டாடுவது என கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

முத்தமிழறிஞர் தமிழர் தலைவர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாள் விழாவை ஒட்டி வேலூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட 8 பகுதி கழகங்கள் மற்றும் 36 வட்ட கழகங்களிலும் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செய்து தங்களால் இயன்ற உதவிகளை ஏழை எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கிடவும் பள்ளி மாணவிகளுக்கு நோட்டுப் புத்தகங்கள் வழங்குவது ஆதரவற்ற முதியோர் இல்லங்களில் உணவுகள் வழங்குவது மற்றும் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்குவது எனவும் பிறந்தநாள் விழாவினை ஜூன் மாதம் முழுவதும் மாநகர பகுதிகளில் சிறப்பாக கொண்டாடிட அனைவரையும் இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

மாநில அரசே பல்கலைக்கழக வேந்தர்களை நியமிக்கலாம் என வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பு உச்சநீதி மன்றத்தில் பெற்றுத் தந்து மாநில சுய ஆட்சிக்கு வித்திட்ட முதலமைச்சர் கழக தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கு வாழ்த்துக்களைவேலூர் மாநகர திமுக தெரிவித்துக் கொள்கிறது

இக்கூட்டத்தில் மாநகர துணை செயலாளர் முன்னா ஷெரிப் ஓய் தேவநேசன், மாநகர பொருளாளர் ந. அசோகன் பகுதி கழக செயலாளர்கள் ஆர்பிஇ சசிகுமார், எம்.ஏ.கணேச சங்கர், எஸ் தயால் ராஜ், விஜி.கே.சுந்தரவிஜி, ஆர்.சத்திய மூர்த்தி, ஜி. பாலமுரளி கிருஷ்ணா, தி.அ. முனவர் பாஷா,பி.முருகப்பெருமாள் ஆகியோர்கள் முன்னிலை வகித்தனர். இதில் எஸ் கதிரேசன் ,சி சந்திரசேகரன், மா பா அன்பு நிதி, எம் நூருல்லா, வேலூர் ஜி ரமேஷ், பி எம் தேவராஜ், , டி. லோகநாதன், வி எம் டி ஏ பாலாஜி, எம் அந்தோணி, ஆர் அருண், என் எஸ் ரவி ,வர்த்தக அணி சீனிவாச காந்தி, மீனவரணி உமா சந்திரன், ரமேஷ், காலப்பா என்ற அப்துல் மஜீத், அயலக அணி சக்கரவர்த்தி, வி.எஸ். எம். ஸ்ரீதர்,

ஏ.டேனியல் பாபு, வீனஸ் ஆர் நரேந்திரன், கே யூசுப் கான் மற்றும் வட்டக் கழக செயலாளர்கள் மாவட்ட, மாநகர அணிகளின் துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், கழக முன்னோடிகள் என பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர் கூட்டத்தின் முடிவில் மாநகர துணை மேயர் தி.அ.முகமது சாதிக் மறைவிற்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# ஒழுங்கு நடவடிக்கை

## தலைமைக் கழக அறிவிப்பு

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி நகரத்தைச் சேர்ந்த தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் சி.இலக்குவன், கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Suspension) வைக்கப்படுகிறார்.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை- 600 018.
நாள்: 30.05.2025.

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்,
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருமதி விஜயலட்சுமி பழனிசாமி
### மே 31 (2004)



**திருமதி விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள் கிளைக் கழகச் செயலாளராக நீண்ட நாட்கள் பணியாற்றியவர்.**

**பின்னர், 1991ஆம் ஆண்டு சுல்தான்பேட்டை ஒன்றியக் கழகச் செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பாகப் பணியாற்றினார்.**

**2000ஆம் ஆண்டு கோவை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றிய இவர், கோவை மாவட்டக் கழகச் செயலாளர் பொங்கலூர் நா.பழனிசாமி அவர்களின் துணைவியாராவார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# வலிமைமிகுத் தலைவரே! வருக!
# வியூகங்கள் வகுத்தளிக்க, வருக! வருக!

தென்னக மயக்கம் தீர்க்க முயன்ற திராவிட இயக்கத்தின் வலிமைமிகு இயக்கமாம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் இதயமாம் பொதுக்குழு மதிரையம்பதியில், நான்மாடக்கூடலில் ஜுன் மாதம் 1 அன்று கூடுகிறது.

வெள்ளை ஏகாதிபத்தியம் இந்தியாவில் காலூன்றி, வேர் பிடித்து, ஒன்றுபட்ட இந்தியாவை ஓர் குடையின் கீழ் கொணர்ந்த காலம் முதல், உரிமை கேட்டும், வறுமை போக்கவும், பதவி கேட்டும், பரிதவிப்போர் நிலை மாற்றவும் சிறு, சிறு குழுக்களாக செயல்பட்டது முதல், இந்தியாவில் ஏ. ஓ. ஹூம், அன்னிபெசன்ட் அம்மையார் ஆகியோரது அரிய முயற்சியால் இந்திய தேசிய காங்கிரஸ் ஆனது முதல், இந்நாள் வரை எத்தனை இயக்கங்கள், சபைகள், சங்கங்கள், கட்சிகள், கழகங்கள், குழுக்கள் தோன்றி, தொடர் ஓட்ட அரசியலில் இடர்பட்டு மறைந்தன.

இன்னமும் இருக்கிறோமென இறுதி மூச்சுடன் மல்லுகட்டும் இயக்கங்கள், அமைப்புகள் இந்தியாவில் எத்தனை! எத்தனை!

இவற்றில் விரல் விட்டு சொல்லக்கூடிய கட்சிகளில் நம்மரும் திராவிட முன்னேற்றக் கழகம் மாற்றாராலும், மலைத்து, மதித்து, ஏற்றுக்கொள்ளப்படுவது அதன் தொன்று தொட்ட, தொய்வற்ற ஜனநாயக மாண்பினால் தானே!

அறிவுலக மேதை அறிஞர் அண்ணா அவர்களால் குடும்ப பாச உணர்வுடன் கொட்டும் மழையில் துவக்கப்பட்ட நமது கழகம், அண்ணாவிற்குப் பிறகு, அவரது இதயத்தை இரவலாகக் கொண்ட நம் தலைவர் கலைஞர் அவர்களைத் தொடர்ந்து, திராவிடப் பேரரசர் தலைவர் தளபதியவர்களால் ஜனநாயக முறைப்படி வழிநடத்தப்பட்டு, நாடும், ஏடும், நல்லோரும், வல்லோரும் போற்ற வெற்றிநடை போடுகிறது.

கழகத்தின் முக்கிய முடிவுகள், தீர்மானங்கள், போராட்ட வியூகங்கள், கூட்டணி கொள்கை முடிவுகள் இவற்றை உறுதி செய்வதும், உயிர் கொடுப்பதும் கழகப் பொதுக்குழுவே!

நமது தலைவர் கலைஞர் அவர்களையே பொருளாராக்கியது மாயவரத்தில் கூடிய பொதுக்குழுதானே!

பொருளாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட வேளையில் நன்றி கூறிய பொருளாளர் கலைஞர் அவர்கள், “ பணத்தை பாதுகாப்பேன்! என்று குறிப்பிட்டபோது, பொதுக்குழுவில் இருந்த பொதுச்செயலாளர் அண்ணா அவர்கள், “ பணத்தை சேர்த்துப் பாதுகாப்பேன்” என்று உறுதி கூற கலைஞரை வற்புறுத்தினார். பொருளாளர் கலைஞரும் உறுதி கூறினார்.

எதிர்காலத்தில் நமது இனம்காக்க, இளைஞர் படைதனை ஏற்றமுடன் வழிநடத்திய தளபதியவர்களை துணைப் பொதுச் செயலாளராக அறிவித்ததும் 2003 ல் கூடிய கழகப் பொதுக்குழுவே!

### வழக்கறிஞர்
## வெ.அன்புவாணன்
கொள்கைப் பரப்பு துணைச் செயலாளர்



தலைவர் கலைஞரின் மனசாட்சியாய், இயக்கத்தின் சுவாசக்காற்றாய், புலிநிகர் பாய்ச்சலோடு, சிலருக்கு காய்ச்சலைத் தந்து, எரிமலையாய், சுடுநெருப்பாய், சங்கநாதம் எழுப்பிய மாமேதை முரசொலி மாறன் அவர்களின் விவேகம் நிறைந்த, வினாக்கள் பொதிந்த, வீரமுழக்கம் கேட்டதும் கழகப் பொதுக்குழுக்களில் தானே!

தொடரும் கழகத்தின் வெற்றிப் பயணத்தில் இடையே இடரும் துரோக சறுக்கல்களையும், வேரறுத்து வெற்றிப் பண் இசைப்பதும் கழகப் பொதுக்குழுவே!

கழகத்தின் இரத்த நாளங்களாம் லட்சோப லட்சம் வீரமறவர் என்றும் தலைவர் கலைஞர் பக்கமே!

கலைஞரே, கழகம்! கழகமே, கலைஞர்! என்ற உறுதியை கழகப் பொதுக்குழுக்கள் தானே அவணிக்கு அறிவித்தது.

சோதனைகாலம் ஒன்று வந்தது.

கழகத்தை, கருப்பு சிவப்பு கொடியை தங்களின் சொந்தமாக்க சிலர் எத்தனித்தபோது, அவர்களது முயற்சிகள் முனைமழுங்கி, எடுபடாமல், முன்னேற்றக் கழகம் என்றும் மு. க. வின் கழகமென்றே முறையாய், டெல்லிப் பட்டணத்து தேர்தல் கமிஷன் அங்கீகரித்து தீர்ப்பு வழங்கியது பழைய வரலாறு.

தீர்ப்பு வந்த மறுநாள் முரசொலியில், நமது உயிரினும் மேலான தலைவர் கலைஞர் அவர்கள்,

உடன்பிறப்பே!

அண்ணா தந்த கருப்பு சிவப்பு கொடியையும், உதயசூரியன் வெற்றி சின்னத்தையும், சிதறாமல், துரோகிகள் சிதைக்காமல் பெற்றுவிட்டோம். அதனால் எனக்கு இன்று நீ மலர் மாலை வாங்கி வருகிறாய். மகிழ்ச்சி!

“ஒருவேளை தீர்ப்பு மாறியிருக்குமானால், நிச்சயம் எனக்கு மலர் வளையமன்றோ, வாங்கி வந்திருப்பதால்” என இதயமுருக எழுதி, நமது கண்களில் ஆனந்தக் கண்ணீர் அருவியாய் பெருகக் காரணமாக அமைந்ததும் தஞ்சையில் 1995 ல் கூடிய பொதுக்குழுவின் உறுதியான முடிவே.

இத்தகு சிறப்பு மிக்க கழகத்தில் ஆரம்பத்தில் பொதுக்குழு, பிரச்சாரக் குழு உறுப்பினராய் பொறுப்பேற்று, தனது அயராத கடும் உழைப்பால் படிப்படியாக நம் தலைவர் கலைஞர் வழிநடத்திய கழகத்தில் 1969 ல் கோபாலபுரம் இளைஞர் திமுக என்ற அமைப்பினை ஏற்படுத்தி, கழகத்தில் பகுதி பிரதிநிதியாக மாவட்டப் பிரதிநிதியாக, பொதுக்குழு உறுப்பினராக உயர்ந்து, நெருக்கடி நிலையெனும் நெருப்பாற்றை நீந்திக் கடந்து, வளர்ந்து இன்று எழுச்சிமிகு கழகத்தின் கம்பீரத்தலைவராய் தளபதியவர்கள் உயர்ந்து நிற்கிறார்.

இந்தியத்திருநாட்டை வழிநடத்த, இதோ ஒரு தலைவர் மீண்டும் தெற்கே! என வடபுலத்து அரசியல் விற்பன்னர்கள் வியக்கும் வேறுபட்ட சூழலில்,

உழைத்துக் களைத்து, கருத்த தொண்டன்
தன் இனத்தை வழிநடத்தும் தலைவரை
வரவேற்று சிந்திடும் சிவப்புச் சிரிப்பாகவே
கருப்பு சிவப்பு கொடிதோரணங்கள் தலைவரை
வரவேற்று அசைந்தாடும் மதுரை மாநகர் சாலைகளில்!
காலத்தால் அழியாத கழகத்தை
காவிரித்தாய் கோலப்புகழ்பாட, கொள்கை இளைஞரெல்லாம்
ஸ்டாலின் எனும் எங்கள் தலைவரின் ஆலின் நிழலில்

ஆரியத்தின் வேரறுக்க அணிவகுப்போம் எனும் சூளுரையோடு கூடிடும் சுயமரியாதை பொதுக்குழு

நரியும் பரியாய் போன கதை!
நாரதர் பெண்ணாய் ஆனகதை!
உறியை கண்ணன் உடைத்தக் கதை!
ஊரார் போற்றிய பழைய கதை!

இந்த மதுரை மண்ணிற்கே உரியது எனத் தலைவர் கலைஞர் அடிக்கடி குறிப்பிட்ட மதுரையில், அண்ணா வழி வந்த கண்ணான திமுகழகத்தின் பொதுக்குழு தமிழகமெங்குமுள்ள ஆயிரக்கணக்கான கொள்கை மறவர் கூட்டம் சங்கமிக்கிறது கூடல் மாநகரில்! அறம் தழைத்து, செழித்த மதுரை மூதூரில்!

ஆரியப்படை கடந்த பாண்டிய மன்னர் பூமியில்! நாயக்க மன்னர் படைத்த ஆயிரம் கால் மண்டபம் அமைந்த மாநகரில் ஆயிரம் காலத்துப் பயிராம் கழகத்தின் பொதுக்குழு கூடுகிறது.

நீதியை நிலை நாட்ட, கேள்வி கேட்ட கண்ணகியின் முன், யானோ அரசன்? யானே கள்வன் என செத்து வீழ்ந்த அறப்புகழ் அரசன் நெடுஞ்செழியப் பாண்டியன் அரசாண்ட மாண்புடை மதுரையில், நெஞ்சுக்கு நீதி சொன்ன தலைவர் கலைஞரின் வழிவந்த திராவிடப் பேரரசர் தளபதியவர்களின் தலைமையில் எதிர்கால அரசியல் வியூகங்கள் வகுக்க, ஞாயிறன்று கூடுகிறது கழகப் பொதுக்குழு!

அடுத்த ஆண்டு தேர்தல் சமர்களத்தில் அமர்க்களமாய் வெற்றி மலர்களை அள்ளிச் சூடிட, அறிவுடை கழக முன்னணியினரின் ஆலோசனை உரைக்கும் பொதுக்குழு!

ஆரிய மாயை அகற்றப்பட,
இந்தித் திணிப்பை என்றும் எதிர்க்க,

தீ பரவட்டும் என தடந்தோள் தம்பியர் படையை வழிநடத்தும் திராவிடப் பேரரசர் தேர்தல் உத்திகளை தீட்டித் தரும் திராவிடப் பொதுக்குழு!

சனாதனத்தை சாய்த்திட, மக்களாட்சி மாண்பினைக் காத்திட, எல்லோருக்கும் எல்லாம் எனும் சமத்துவ கொள்கை கொண்டு, நமையாளும் தென்னவர் போற்றும் மன்னவரை, தடம் பற்றி உடன் வரும் சின்னவர், இளைஞர்களின் இதயநிதியாம் மாண்புமிகு உதயநிதி அவர்களையும் வருக! வருக! என வரவேற்போம்!

தமிழினம் காத்திட தளபதியே வருக! என தமிழின வீரர் பட்டாளம் வாஞ்சை மிகுதியால் வரவேற்கிறது!

பார் போற்றும் வெற்றி வேந்தர் தளபதியவர்களை வருக! வருக! என்றே இருவண்ண கொடிகள் அசைந்தாடி வரவேற்கின்றன.

ஜனநாயகப் போர்க்களத்திற்கு கொள்கை வாளையும், வேலையும், சுயமரியாதை ஈட்டியையும், கேடயங்களையும் வடித்துத்தந்திட திராவிடப் பெருவேந்தே வருக என நாமும் வரவேற்போம்!

ஆம்!
வலிமைமிகு தலைவரே! வருக!
வியூகங்கள் வகுத்தளிக்க வருக! வருக!



உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் காந்தி மார்க்கெட் வளாகத்தில் ரூ.35.00 இலட்சம் மதிப்பீட்டில் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டியினை கட்டுவதற்கு நேற்று முன்தினம் (29.05.2025) அடிக்கல் நாட்டினார். அருகில் மாவட்ட ஆட்சித்தலைவர் செ.சரவணன், திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.சச்சிதானந்தம், ஒட்டன்சத்திர நகராட்சி தலைவர் க.திருமலைச்சாமி, துணைத்தலைவர் ப.வெள்ளைச்சாமி, ஆணையாளர் திருமதி சுவேதா மற்றும் பலர் உள்ளனர்.